**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 71/2020 |
| Name | : Abdullah |
| P.W. | : 1 |
| Father Name | : Mohammed Aneeba |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சோழமாதேவியில் வசிக்கிறேன். பந்தல் வேலை செய்கிறேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை 2019 ம் வருடம் மாலை 04.00– 04.30 மணி அளவில் சோழமாதேவி மேடு பஸ் ஸ்டாப் அருகில் பேக்கரியில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தேன் அப்போது சத்தம் கேட்டு திரும்பி பார்த்தேன் மடத்துக்குளத்தில் இருந்து கணியூர் நோக்கி வந்த ஆம்புலன்ஸ் ரோட்டிற்கு கிழபுறம் குழாயில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்த அப்பாஸ் என்பவர் மீது மோதியிருந்தது. ஓடிச் சென்று பார்த்தேன். அவர் ரத்த வெள்ளத்தில் இருந்தார் அவருக்கு தலை, காது பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது ஆம்புலன்ஸ் சற்று தள்ளி சென்று நின்றது. ஆம்புலன்ஸ் ஓட்டி வந்தவரை நான் பார்க்கவில்லை. காயம்பட்டவரின் அப்பா யூசுப்பிற்கு தகவல் கொடுத்துவிட்டு காயம்பட்டவரை வேறு ஆம்புலன்ஸ் மூலமாக மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு நானும், சபீபுல்லா என்பவரும் அழைத்துச் சென்றோம். மருத்துவர் அவரை பரிசோதித்து

இறந்துவிட்டதாகவும், உடுமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லவும் சொன்னார். அதற்குள் காயம்பட்டவரின் அப்பா அங்கு வந்துவிட்டார். நானும், அவரும், சபீபுல்லா மூவரும் உடுமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். போலீசார் மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை செய்தார்கள் அப்போது நான் உடன் இருந்தேன். யூசுப் மற்றும் சபீபுல்லா இருவரும் தற்போது இறந்துவிட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் 10.04.2019 ம் தேதி 04.15 மணி அளவில் மடத்துக்குளம் – கணியூர் ரோட்டில் சோழமாதேவி மேடு பஸ் ஸ்டாப் அருகில் அப்பாஸ் என்பவர் தென் வடல் ரோட்டில் கிழபுறமாக நின்று கொண்டிருந்த போது TN 55 AD 8358 என்ற ஆம்புலன்ஸ் வாகனத்தை எதிரி ஜெயபிரகாஷ் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டிச் சென்று ரோட்டின் வலது பக்கம் ஏறி அப்பாஸ் மீது ஏற்றி விபத்தை ஏற்படுத்தினார் என்றும், மேற்படி சம்பவத்தை நான் மாடர்ன் பேக்கரி முன்பு நின்று நேரில் பார்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.27 17:28:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM

| | |
|---|---|
| CC No. | : 71/2020 |
| Name | : Jainuba |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**27.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் சோழமாதேவி மேட்டில் வசிக்கிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். சுமார் 7 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை எனது கணவர் அப்பாஸ் மாலை 04.15 மணி அளவில் தண்ணீர் பிடிப்பதற்காக வீட்டிலிருந்து சென்றார். எனது கணவர் மீது ஆம்புலன்ஸ் மோதியதாக அப்துல்லா அவர்கள் தகவல் சொன்னார். நாங்கள் மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். எனது கணவர் இறந்துவிட்டார். உடுமலை அரசு மருத்துவமனையில் போலீசார் பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.27 17:28:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்